# நான் அல்லாஹ்விடமிருந்து பரிசுத்த ஆவியை பெற்று நிற்கின்றேன்.

إِنَّ الَّذِينَ لَا يُؤْمِنُونَ بِآيَاتِ اللَّهِ لَا يَهْدِيهِمُ

"அல்லாஹ்வின் அடையாளங்களிடம் நம்பிக்கை கொள்ளாதவருக்கு அல்லாஹ் நேர்வழியினை வழங்குவதில்லை."





## ஹஸ்ரத் அஹமது (அலை) அவர்கள் கூறுகிறார்

"நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன். மேலும் எனக்கு பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறைவனுடைய இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்தவாறு ஒன்று சேர்ந்திருந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நல்லவர்களின் ஜமாஅத்தும் ஒன்று கூடி துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலம் இரண்டாவது வல்லமை விண்ணிலிருந்து இறங்கி உங்கள் இறைவன் எப்படிப்பட்ட வல்லமை மிக்க இறைவன் என்பதை உங்களுக்கு காட்டட்டும். உங்கள் மரணத்தை அருகில் இருப்பதாகக் கருதுங்கள். அந்த நேரம் எப்போது வரும் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள்.

தூய மனதைக் கொண்ட ஜமாஅத்தின் சான்றோர்கள் என் பெயரில் எனக்கு பிறகு மக்களிடமிருந்து பைஅத் வாங்கட்டும். ஆசியா, ஐரோப்பா போன்ற உலகின் பல்வேறு கண்டங்களிலும் பூமியிலுள்ள பல்வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகின்ற எல்லா நல்ல ஆன்மாக்களையும் எல்லா நல்ல இயல்பு கொண்டவர்களையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்த்து, தனது அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்க்கவே இறைவன் விரும்புகிறான். இதுவே இறைவனுடைய நோக்கமாகும். அதை நிறைவேற்றுவதற்காகவே நான் உலகத்தில் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே நீங்கள் மென்மை, நல்லொழுக்கம், துஆக்கள் ஆகியவற்றில் அழுத்தம் கொடுத்து இந்த நோக்கத்தைப் பின்பற்றுங்கள். **எனக்கு பிறகு யாராவது இறைவனிடமிருந்து பரிசுத்த ஆவியை பெற்று நிற்காதவரை நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பணியாற்றுங்கள்."** (அல் வஸிய்யத் - உயில், தமிழாக்கம் பக்கம் 13, 14)

ஆம், மேல் குறிபிட்ட ஹஸ்ரத் அஹமது (அலை) அவர்களின் கூற்றின் படி, ஆப்பிரிக்கன் கண்டத்தில் மொரிஷியஸ் நாட்டைச் சார்ந்த ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து பரிசுத்த ஆவியைப் பெற்று அருளுக்குரியவராக நிற்கின்றார், அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்.

## ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.

"எனக்கு பணமோ பதவியோத் தேவையில்லை. மானிடகுலத்திற்கு எச்சரிக்கை விடுப்பதற்கு எல்லாம் வல்ல அந்த அல்லாஹ்விடமிருந்து நான் தோன்றியிருக்கிறேன். எனது வேலையானது, அல்லாஹ் விடமிருந்து பெறும் தூதுச் செய்தியை எட்டவைப்பது மட்டுமாகும். நீங்கள் இதை ஏற்றுக்கொள்வீர களேயானால் இம்மையிலும், மறுமையிலும் உங்களுக்கு அமைதி மற்றும் சாந்தியினை பெறலாம். அல்லாஹ்வின் இந்த செய்தியை நீங்கள் நிராகரித்து விடுவீர்களேயானால் எனக்கும் உங்களுக்கும் நடுவில் தீர்ப்பு கூற அல்லாஹ் போதுமானவன் ஆவான். இன்று முதல் நானே இந்நூற்றாண்டின் முஹைத்தீன் என்று அல்லாஹ்வைச் சாசியாகக்கொண்டு நான் கூறுகிறேன்."

**மேலும் அன்னார் கூறுகின்றார்கள்.**

"இக்காலகட்டத்தில் உங்களுக்காக அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதராகிய இந்த எளியவனின் நேர்மையான அறிவுரைகளுக்கு செவிசாய்த்து விடுங்கள். தங்களைத் தாங்களே மூழ்கடித்த பாவங்களின் இருளிலிருந்து மனித குலத்தை (இறைவனின் பக்கம்) வழி நடத்த ஒளி தரும் ஒரு விளக்காக நான் வந்துள்ளேன். நான் சொல்வதைக் கேட்டு அல்லாஹ்வின் பாதையில் பயணம் மேற்கொள்ளுபவர்கள் இம்மையிலும் மறுமையிலும் செழிப்பார்கள். இவ்வுலக வாழ்கையை விட மிக சிறப்பாக அவர்களின் மறுவுலக வாழ்க்கை அமையும், ஏனெனில் பிந்தைய வாழ்கை நித்தியமானது, இவ்வுலக வாழ்க்கையை விட உண்மையானது. தூய்மையான நம்பிக்கை அதாவது எந்த பங்காளிகளும் இல்லாத, ஏக இறை நம்பிக்கையைத் தழுவுவதற்கு நான் மனிதகுலத்திற்கு அனைத்தும் அழைப்பு விடுக்கின்றேன். உங்கள் இதயத்தில் நுழைந்த சிலைகள் மற்றும் பிற தெய்வங்கள் அல்ல மாறாக அல்லாஹ் மட்டுமே வணக்கத்திற்குரியவன். சாத்தான் மனிதர்களுக்கு வெளிப்படையான எதிரி ஆவான். ஆகவே அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப்பிடித்து, திருக் குர்- ஆனின் போதனைகளுக்கேற்ப உங்கள் வாழ்க்கையை நெறிமுறையாக்குங்கள். இறைத்தூதர்களின் முத்திரையாக அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அங்கீகரித்து கொள்ளுங்கள். அத்தோடு அறியாமை மற்றும் வீழ்ச்சியின் இந்த சகாப்தத்தில் உங்கள் அனைவருக்கும் தூதராக தோன்றிய இந்த எளியவனை ஏற்றுக் கொள்ளுங்கள்.

Prepared by
DR. E.THAHIR
Amir - North kerala
Ph: 9746525847

EDITING & PUBLISHING ARE DONE BY
AMIR
JAMAAT - UL-SAHIH-AL-ISLAM
TAMIL NADU Ph No: 917502272774

Translated by
Azim Ahmad

# இயற்க்கை பேரழிவுகள் மற்றும் முன்னறிவிப்புகள்



மனித குலத்திற்கு ஏற்படும் பேரழிவுகள்
வெறும் இயற்கை பேரழிவுகள் மட்டுமா?

وَمَا كُنَّا مُعَذِّبِينَ حَتَّىٰ نَبْعَثَ رَسُولًا

"ஒரு தூதரை அனுப்பாதவரை ஒரு போதும் ஆக்கினையை அனுப்புவதில்லை" (17:16)

மனிதனின் பாதுகாப்பு உணர்வை ஒரு நொடியில் அழித்து, அவரை பைத்தியக்கார மன அழுத்தத்தின் மற்றொரு உலகத்திற்கு இட்டுச்செல்லும் பேரழிவுகளைப் பற்றி மிக தெளிவாக எச்சரித்தது நபிமார்கள் ஆவார்கள்.

**இந்நூற்றாண்டின் முஜத்தீத், முஹைத்தீன், கலீ∴பத்துல்லாஹ், ரசூலுல்லாஹ் மற்றும் நபியுல்லாஹ் என்இந்நூற்றாண்டின் முஜத்தீத், முஹைத்தீன், கலீ∴பத்துல்லாஹ், ரசூலுல்லாஹ் மற்றும் நபியுல்லாஹ் என்று வாதித்து வருகின்ற ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் 2010 ஏப்ரல் 23 ம் தேதியன்று ஆற்றிய ஜுமா பேருரையில் மனிதகுலத்தை இவ்வாறு எச்சரித்தார்கள்.**


"நாம் சாட்சியாக இருக்கும் இந்த நாட்களானது மனிதகுலத்தைத் தாக்கும் பல்வகையான பேரழிவுகள் குறித்த அச்சத்தால் நிரம்பியுள்ளன. ஒவ்வொரு நாளும் நிலத்திலும் கடலிலும் ஏற்படும் அழிவுகள் ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாக இடம் பெற்றுள்ளது. தீப்பிடித்தல், வெள்ளப்பெருக்கம், விமானம் மற்றும் ஹெலிகாப்டர்களின் அபாயங்கள், மைன் விபத்துகள், எரிமலைகளின் வெடிப்புகள், நில அதிர்வுகள், சூராவளிகள் மற்றும் சுனாமிகள் போன்ற விபத்துகளின் பட்டியில் மிக நீளமானது திருக்குர் ஆன் இதை இவ்வாறு தெளிவுப்படுத்தியுள்ளது.

"மக்களின் கைகள் செய்த செயல்களினால் நிலத்திலும் கடலிலும் குழப்பம் பரவியுள்ளது. இதனால் அவர்கள் தங்கள் தீய செயல்களிலிருந்து திருபுவதற்காக, இறைவன் அவர்களை அவர்களின் செயல்களுள் சிலவற்றை சுவைக்க வைப்பான். நீர் கூறுவீராக: நீங்கள் பூமியில் பயணம் செய்து உங்களுக்கு முன்னிருந்தவர்களின் முடிவு எவ்வாறு தீயதாக ஆயிற்று என்பதைப் பாருங்கள். அவர்களுள் பெரும்பாலார் இறைவனுக்கு இணைவைப் போராய் இருந்தனர்." (30:42,43)

மார்க்கப் போதனைக்காக இறைவனிடமிருந்து நான் அனுப்பப்பட்ட நாளிலிருந்து அதாவது 2001- ஆம் ஆண்டிலிருந்து நான் எச்சரித்து வந்துள்ள இத்தகைய பேரழிவுகள் உலகெங்கிலும் இன்று நிரம்பியுள்ளது. ஆனால் மக்கள் இத்தகைய பேரழிவுகளை வெறும் இயற்க்கை பேரழிவுகளாகவே கருதுகின்றனர். இத்தகைய பேரழிவுகள் ஏன் நடக்கின்றன? தீமை இப்போது எங்கும் பரவலாக உள்ளது. உலகின் எல்லா மூலைகளிலும் தீமை பரவியது போலவே, சர்வவல்லமையுள்ள அல்லாஹ் தொற்று நோய்களையும் பரவசெய்தான். மனிதனின் தீமைகளே இத்தகைய பேரழிவுகளையெல்லாம் அழைத்து வந்துள்ளன. மற்றொரு வார்த்தையால் கூறுவோமேயானால், மனிதனே தனது கரங்களால் நாசத்தின் வழியைத் தேடிக்கொள்கின்றான்."

"இவை அனைத்தும் இயற்க்கையான நிகழ்வா அல்லது மனிதகுலத்திற்கு ஒரு எச்சரிக்கையாக இறைவனிடமிருந்து வந்த அடையாளமா? இப்போது நீங்கள் இதைப் பற்றி சிந்திக்க வேண்டும். இத்தகைய நிகழ்வுகளை அனைத்தும் நீங்கள் கவனத்தில் கொண்டு செயல்படுங்கள் அல்லது இந்த செய்தியை உங்களுக்கு நிராகரிக்கலாம். நீங்கள் ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் முன் உங்கள் எல்லா செயல்களுக்கும் உறுதியாகக் கணக்கு கொடுக்க வேண்டியிருக்கும். இந்த நூற்றாண்டில் மனிதகுலம் ஆபத்தில் உள்ளது என்ற செய்தியை பெறவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஏனெனில் அல்லாஹ்வின் தாழ்மையான இந்த ஊழியன் மூலம் இந்த இறைச்செய்திகளை நீங்கள் பெற்றுவிட்டீர்கள். மேலும் இச்செய்திகளை பெற உலகிற்கு இன்னும் கூடுதலான வசதிகளை அளிக்கும் உயர் தொழில் நூட்பங்களை இந்த நூற்றாண்டில் அல்லாஹ் மனிதர்களுக்கு வழங்கியுள்ளான்." (ஜுமா பேருரை 23-04-2010)





2017 செப்டம்பர் 29 - ம் தேதியன்று அன்னர் நிகழ்த்திய ஜுமா பேருரையில் உலகமக்களுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

"சகோதர சகோதரிகளே என்னை நம்புங்கள். பூமியில் கவலைக்குரிய ஏராளமான பேரழிவுகள நிகழப்போகிறது. பூகம்பங்கள், வெள்ளப்பெருக்கம் காரணமாக ஏராளமான மக்கள் தங்கள் உயிர்களை இழக்க நேரிடும். கொடூரமான குற்றங்கள் மற்றும் நாடுகளுக்கு எதிராக நாடுகள் மேற்கொள்ளும் போர்கள் காரணமாக அப்பவிகளின் இரத்தம் சிந்தப்படும். ஊழல் பல நாடுகளில் அழிவை ஏற்படுத்தும். சக்தி வாய்ந்த நாடுகள் பலவீனமான நாடுகளை நசுக்கும், மேலும் இஸ்லாமும் ஆபத்தில் உள்ளது. என்பதை மறந்துவிடாதீர்கள். அதாவது முஸ்லீம்கள் சிறுபான்மையாக இருக்கும் பகுதிகளில் அவர்களின் உயிர்கள் ஆபத்தில் ஆகும். முஸ்லீம்களே, மனித குலமே, நீங்கள் பெருமளவில் முன்னெச்சரிக்கைகள் எடுத்து, உங்களுக்கு தேவையான உணவு பொருள்களை சேமித்துக் கொள்ளுங்கள். மனிதனின் மரணத்திற்கு காரணமாகும் மற்றொன்றைக் குறித்து நான் உங்களுக்கு தெரிவிக்கிறேன், அது நோய்களாகும். மற்றொரு கொடிய வைரஸ் பூமியில் தோன்றும், அது எல்லா இடங்களிலும் அழிவை ஏற்படுத்தும். இந்த வைரஸால் பலர் இறப்பார்கள். அதற்கான மாற்று மருந்தைக் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே இலட்சக்கணக்கான மக்கள் இறந்திருப்பார்கள் இது இறுதி நாளின் காட்சியளிக்கும். இறுதி நாள் என்பது அனைவரும் ஒரே நேரத்தில் இறந்து மண்ணோடு மண்ணாகிவிடும் ஒரு நாள் அல்ல, மாறாக இலட்சக்கணக்கான மக்கள் இறக்கும்போது அவர்களைப் பொறுத்தவரை இது நிச்சயமாக அவர்களுக்கு ஒரு கியாமத் ஆகும். (ஜுமா பேருரை 29-09-2017)

இந்நூற்றாண்டின் மானிடகுலத்தை சீர்திருத்த அல்லாஹ்வால் அனுப்பபட்ட ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்களின் மேல் கூறிப்பிட்ட தீர்க்கதரிசனங்கள் மிக தெளிவான நிலையில் புலனாகிவிட்டதை நாம் காண்கிறோம். அல்ஹும்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்.


Prepared by
DR. E.THAHIR
Amir - North kerala
Ph: 9746525847

EDITING & PUBLISHING ARE DONE BY
AMIR
JAMAAT - UL-SAHIH-AL-ISLAM
TAMIL NADU Ph No: 917502272774

Translated by
Azim Ahmad

# முபாஹிலா

## அஹமதியா முல்லாக்களே முன் வாருங்கள்

فَمَنْ حَآجَّكَ فِيهِ مِنْ بَعْدِ مَا جَآءَكَ مِنَ الْعِلْمِ
فَقُلْ تَعَالَوْا نَدْعُ اَبْنَآءَنَا وَاَبْنَآءَكُمْ وَنِسَآءَنَا
وَنِسَآءَكُمْ وَاَنْفُسَنَا وَاَنْفُسَكُمْ ثُمَّ نَبْتَهِلْ
فَنَجْعَلْ لَّعْنَتَ اللّٰهِ عَلَى الْكٰذِبِيْنَ ﴿٦٢﴾



இப்பொழுது உம்மிடம் (இறை) ஞானம் வந்து விட்ட பின்னர், உம்முடன் அவரைக் குறித்து வாதாடுதவனிடம் நீர் கூறுவீராக! வாருங்கள், நாங்கள் எங்களுடைய ஆண்மக்களையும், நீங்கள் உங்கள் ஆண்மக்களையும், நாங்கள் எங்கள் பெண்களையும், நீங்கள் உங்கள் பெண்களையும், நாங்கள் எங்களைச் சார்ந்தவர்களையும் நீங்கள் உங்களை சார்த்தவர்களையும் அழைத்துக் கொள்வோம். பின்னர் உருக்கமாகப் பிராத்தனை செய்து பொய்யர்கள் மேல் அல்லாஹ்வின் சாபம் என வேண்டுவோம். (3:64)

"இந்த முல்லாக்களிடம், நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன். நீங்கள் முன்வந்து இந்த முபாஹிலா படிவத்தில் கையெழுத்திட்டு என்னை ஒரு பொய்யன் என்று கூறுங்கள், அதாவது உங்கள் வானொலி, பத்திரிக்கை போன்ற ஊடகங்கள் மூலம் நீங்கள் எதை வேண்டுமானாலும் (எனக்கு எதிராக) வெளிப்படையாக சொல்லுங்கள். மேலும் என்னை ஒரு பொய்யன் என்று கூறி எனக்கு சவால் விடுங்கள். அதன் பிறகு நீங்கள் வந்து இந்த முபாஹிலா படிவத்தில் கையெழுத்திட தயாராக வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் போதனைகளையும் இஸ்லாத்தின் போதனைகளையும் முதுகுக்குப் பின்னால் தூக்கி எறிந்தது யார்? என்று அடையாளம் கண்டு கொள்ள நீங்கள் அல்லாஹ்வின் நீதிமன்றத்திற்கு முன் வாருங்கள். அப்பொழுது பொய்யனுக்கும் உண்மையுள்ளவனுக்கும் இடையே அல்லாஹ் விதி கூறுவான். நான் இந்த முல்லாக்களை அதாவது காதியானிலுள்ள அனைத்து முல்லாக்களுக்கும் அழைப்பு விடுக்கின்றேன். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளிலிருந்து அவர்கள் தடம் புரண்டு, பூமியில் அவர்களின் இறைவனாக அவர்கள் தங்கள் கரங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீ:.பாவை அமைத்துள்ளனர். இவர் தன்னை இந்நூற்றாண்டின் முஜத்தித்தாகவோ, இறைவனின் கலீ:.பாவாகவோ அறிவித்ததுண்டா? இறைவனின் புறமிருந்து ஒரு வெளிப்பாடாவது இவர் பெற்றிருக்கின்றாரா? வாருங்கள் அதை எங்களுக்கு நிரூபித்து காட்டுங்கள். மிர்ஸா மஸ்ரூர் அஹமது சாஹிப் அவர்கள் அல்லாஹ்விடமிருந்து, பெற்றதாக ஒரே ஒரு வெளிப்பட்டையாவது நீங்கள் காட்டி, அதை நிரூபித்துக் காட்டுங்கள். அல்லாஹ்வின் நபி, அல்லாஹ்வின் சிங்கம் போன்றவர் என்பது உங்களுக்கு நன்கு தெரியும். அல்லாஹ் தன்னுடன் இருப்பதால் அவர் எந்த நபருக்கும் பயப்படுவதில்லை. மேலும் அல்லாஹ் உங்களுடன் இருக்கின்றான் என்று நீங்கள் கூறுவீர்களேயானால் நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வாருங்கள், முன் வாருங்கள்! முபாஹிலாவுக்கு முன் வர நான் உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்."(ஜு'முஆ பேருரை 23-11-2018)

இந்த நூற்றாண்டின் கலீபத்துல்லாஹ் என்ற வகையில் நான் உங்களுக்கு சவால் விடுகிறேன், ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாத்தின் முன்னேற்றத்தை யாராலும் தடுக்க முடியாது. இது இந்த உலகில் அல்லாஹ்வின் ஜமாஅத்தாகும். துன்புறுத்தல் மற்றும் தொல்லை தருதலால் உண்மையான நம்பிக்கையாளர்களை தங்கள் இலக்கிலிருந்து திசை திருப்ப உங்களுக்கு முடியாது. இது இந்தியாவிலோ அல்லது வேறு எந்த இடத்தில் இருந்தாலும் இந்த இறை ஒளியை யாராலும் தடுக்க முடியாது. இந்த ஒளி நிச்சயமாக உண்மையுள்ளவர்களின் இதயத்தில் நூழையும். தாகமாக இருப்பவர்களின் இதயங்களில் இந்த ஒளி இடம்பெற்றுவிடும். அக்கிரமிப்பவர்களே நீங்கள் உங்களையே அழிக்கின்றீர்கள். ஜமா அத்துச் சஹ்ஹில் இஸ்லாத்தின் வெற்றி உறுதியாகும். சூரியனும் நட்சத்திரங்களும் அவற்றின் சுற்றுப்பாதையிலிருந்து தடம் புரண்டுவிடலாம், பூமியின் சுழற்சி நின்று விடலாம். ஆனால் ஜமா அத்துச் சஹ்ஹில் இஸ்லாம் முன்னேறுவதை எந்த மனித அதிகாரிக்கும் தடுக்க முடியாது. எனவே கவனமாக இருங்கள், ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாத்தின் அழிவுக்குத் திட்டம் தீட்டுபவர்கள் ஜாக்கிரதையாக இருங்கள், அத்தகைய நபர்கள் மீது இறைக் கோபமும் தண்டனையும் வீழும். (பேருரை - 14-08-2013)

இந்த நூற்றாண்டில் உலக மக்களை சீர்த்திருத்தி, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பக்கம் அழைத்து செல்வதற்கு இறைவனால் அனுப்பபட்ட முஜத்தித், முஹையுத்தீன், கலீ:.பத்துல்லாஹ், ரசூலுலாஹ் மற்றும் நபியுல்லாஹ் என்று கடந்த 20 ஆண்டுகளாக வாதம் செய்துவரும் ஹஸ்ரத் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்களை பொய்யன் என்று முத்திரை குத்தி பிரச்சாராம் மேற்கொண்டு வரும் அஹமதியா முல்லாக்களே உங்களுக்கு ஆன்மீக ஆற்றலும் தைரியமும் இருந்தால் இந்த முபாஹிலாவிற்கு முன் வாருங்கள்.

Prepared by
DR. E.THAHIR
Amir - North kerala
Ph: 9746525847

EDITING & PUBLISHING ARE DONE BY
AMIR
JAMAAT - UL-SAHIH-AL-ISLAM
TAMIL NADU Ph No: 917502272774

Translated by
Azim Ahmad